TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ பிரிவு 154 இன் கீழ்)

C 8064882

1. District மாவட்டம்: Krishnagiri PS: காவல்நிலையம்: VKAC Year ஆண்டு: 2020 FIR No முதல் அ எண்: 4/AC/2020 Date நாள்: 06-08-2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to நாள் வரை 22.07.2020/10.45 hrs 04.08.2020/11.45 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.08.2020 Time நேரம் : 13.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.08.2020 Time நேரம் : 13.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o Block Educational offices, Kelamangalam and O/o District Educational offices, Denkanikottai, 70 km South west.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Shoorekumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ramaiah
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24 yrs. (d) Nationality : நாட்டினம் (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி Plot No. 203, Manjunatha Nagar, Karnur Village, Cattle Farm Post, Mathigiri, Hosur, Krishnagiri Dist.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Balaji Superintendent O/o Block Educational offices, Kelamangalam.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets as enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 6/2/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
06.02.2020/16.30 hrs.

Name: பெயர் G.V. Kirushnaa Raajar
Rank: நிலை D.S.P ..... No. எண் .........

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2020 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 06.08.2020ம் தேதி மதியம் 13.30 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம் கர்னூர் கிராமம் மஞ்சுநாதா நகரை சேர்ந்த கிஷோர்குமார் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்துமூலமான புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்

கிஷோர்குமார்,
த/பெ ராமையா,
பிளாட் எண்-203, மஞ்சுநாதா நகர்,
கர்னூர் கிராமம்,
ஒசூர் கால்நடை பண்ணை அஞ்சல்,
ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

பெறுநர்

டி.எஸ்.பி அவர்கள்,
ஊழல்தடுப்பு மற்றும் லஞ்சஒழிப்பு துறை,
கிருஷ்ணகிரி.

ஐயா,

நான் கர்னூர் மஞ்சுநாதா நகரில் என் அம்மா அலமேலுஅம்மாவுடன் வசித்துவருகிறேன். நான் என்னுடைய படிப்பை முடித்து வேலை தேடிவருகிறேன். என்னுடைய அண்ணன் பாலாஜியை தவிர என்னுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. என்னுடைய அப்பா ராமையா கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனுசோனையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிவந்தார். அவர் முதுகுத்தண்டுவட வலியின் காரணமாக 29.04.2020ம் தேதியில் எங்கள் வீட்டிலேயே தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டார். அதன் பின்னர், என் அப்பாவின் இறப்பு சான்றிதழை ஒசூர் நகராட்சி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு, 17.06.2020ம் தேதியில் நான் கெலமங்கலம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு சென்று, வட்டார கல்வி அலுவலர் திரு.அன்னையா என்பவரை சந்தித்து, என்னுடைய அம்மாவின் பெயரில் குடும்ப ஒய்வூதியத்திற்கான முன்மொழிவு அனுப்புவது சம்மந்தமாக கேட்டேன். அவர் அந்த அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் பாலாஜி என்பவர்தான் குடும்ப ஒய்வூதிய முன்மொழிவை ரெடிபன்னுவார்,

அதனால் அவரை போய் பார்க்குமாறு சொன்னார். நான் உடனே, அன்று காலை சுமார் 11.00 மணியளவில் அதே அலுவலகத்தில் பணியிலிருந்த கண்காணிப்பாளர் பாலாஜி அவர்களை சந்தித்து என்னுடைய அம்மா பெயரில் குடும்ப முன்மொழிவு அனுப்புவது தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர், ஈமச்சடங்கு உதவித்தொகை முழுவதும் வந்த பிறகு, இறப்பு சான்று, வாரிசு சான்று, தடையில்லா சான்று ஆகியவற்றுடன் வந்து அவரை பார்க்குமாறு சொன்னார். நான் அப்போதே, என்னுடைய அப்பாவின் இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவற்றின் நகலை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கி வைத்துக்கொண்டு, தடையில்லா சான்றுடன் பின்னர் வந்து பார்க்குமாறு சொல்லி அனுப்பிவைத்தார். அதன் பின்னர், 22.07.2020ம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு நான் கெலமங்கலம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு சென்று, கண்காணிப்பாளர் பாலாஜி அவர்களை பார்த்து, நானும் என் அண்ணன் பாலாஜியும் தனித்தனியாக கொடுத்த தடையில்லா சான்றின் அசலை அவரிடம் கொடுத்து, என்அம்மா பெயரில் குடும்ப ஓய்வூதிய முன்மொழிவு பற்றிகேட்டேன். அதற்கு அவர், தனக்கு தனியாக ரூபாய் 5,000/- கொடுத்தால்தான் அந்த முன்மொழிவை தயார்செய்து அனுப்புவேன் என்று சொல்லி, பணம் ரூபாய் 5,000/- கொடுக்கும்படி கேட்டார். நான் தற்போது அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், மீண்டும் 04.08.2020ம் தேதி காலை சுமார் 11.45 மணிக்கு கெலமங்கலம் வட்டார கல்வி அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது, கண்காணிப்பாளர் பாலாஜி அங்கு இல்லை. அங்கு இருந்தவர்களை விசாரித்தபோது, அவர் தேன்கனிக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலக பணியாக சென்றிருப்பதாகவும், தேவையெனில் அவரை அங்கு சென்று பார்க்குமாறும் சொன்னார்கள். நான் புறப்பட்டு தேன்கனிக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு சென்று, பகல் சுமார் 12.15 மணிக்கு அந்த அலுவலகத்திலிருந்த பாலாஜி அவர்களை சந்தித்து குடும்ப ஓய்வூதிய முன்மொழிவு பற்றி கேட்டேன். அப்போது, அவர் தனக்கு தனியாக ரூபாய் 5,000/- கொடுத்தால்தான் என்னுடைய அம்மா பெயரில் குடும்ப ஓய்வூதிய முன்மொழிவை அனுப்பமுடியும் என்று உறுதியாக சொல்லிவிட்டார். பணம் ரூபாய் 5,000/-த்தை ரெடிபண்ணிக்கொண்டு எப்போது வேண்டுமானாலும் வந்து தன்னை கெலமங்கலம் வட்டார கல்வி அலுவலகத்திலோ அல்லது தேன்கனிக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலகத்திலோ வந்து பார்க்குமாறு சொன்னார். கண்காணிப்பாளர் பாலாஜி கேட்ட பணத்தை என்னால் உடனடியாக ரெடி பண்ணமுடியவில்லை. இன்றுதான் அந்த பணம் ரூ.5,000/- ரெடிபண்ண முடிந்தது. நான் அந்த பணம் ரூ.5,000/-த்துடன் கண்காணிப்பாளர் பாலாஜியை

நாளை சந்திக்க உள்ளேன். அவர் கேட்டபடி அந்த பணம் ரூ.5,000/- அவருக்கு கொடுக்கவில்லை என்றால், குடும்ப ஓய்வூதியம் பெறுவதிலும், வாரிசு முன்னிரிமை அடிப்படையில் வேலைக்கு பரிந்துரைசெய்வதிலும் தடை ஏற்படும் நிலை உள்ளது. அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக ரூ.5,000/- கேட்ட கெலமங்கலம் வட்டார கல்வி அலுவலக கண்காணிப்பாளர் பாலாஜி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு உண்மையுள்ள, ஒப்பம் R.கிஷோர்குமார். தேதி:06.08.2020, இடம்: கிருஷ்ணகிரி. மேற்படி எழுத்துமூலமான புகாரைப்பெற்று, எதிரியின் பொதுப்படையான நற்பெயர் குறித்தும், எதிரிக்கும் புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும், புகார்தாரரின் முன் நடத்தை பற்றிய விவரங்கள் குறித்தும் ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, புகாரின் தன்மை குறித்து திருப்தியடைந்த பிறகு, புகாரின் தன்மைப்படி இன்று 06.08.2020ம் தேதி மாலை 15.30 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2020 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

6/8/20

(G.V. Kirushnaa Raajan)
Dy. Supdt. of Police
Krishnagiri VAC.